# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108535

1. District / மாவட்டம் : திருப்பூர் PS / காவல்நிலையம் : VAC Year / ஆண்டு : 2022 FIR No. / மு.த.அ. எண் : 06/2022/AC/TPR Date / நாள் : 06.05.2022

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: by the PC (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from / நாள் முதல் : 25.03.2022 Date to / நாள் வரை : 05.05.2022
Time Period : நேர அளவு
Time from / நேரம் முதல் : 1.30hrs Time to / நேரம் வரை : 12.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.05.2022 Time / நேரம் : 09.00hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.05.2022 Time / நேரம் : 09.00hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 3 கி.மீ தெற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி உதவி ஆணையர் (மாநில வரி)
வணிக வரி அலுவலகம்,
திருப்பூர் வடக்கு வட்டம்-II, திருப்பூர்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K.S. ஞானசேகரன்
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : K.R. சீனிவாசன்
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 52/2022
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality இந்தியன்
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Business
தொழில்
(g) Address : A3, சீனிவாசன் அபார்ட்மெண்ட்,
முகவரி PLS நகர், சின்னியம்பாளையம்(Po),
கோயம்புத்தூர்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1). திரு. ஜெயகணேசன், உதவி ஆணையர் (மாநில வரி), வணிகவரித்துறை
திருப்பூர் வடக்கு வட்டம்-II, திருப்பூர்.
2). திருமதி. ரத்னா, கிளார்க், வணிகவரித்துறை, திருப்பூர் வடக்கு வட்டம்-II,
திருப்பூர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இத்துடன் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 06/05/2022 (S) Sasirekha 06.05.2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 06.05.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K. சசிரேகா
Rank: நிலை காவல் ஆய்வாளர்
ஊ.த.க. பிரிவு,
திருப்பூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 6/2022/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 06.05.2022-ம் தேதி காலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது K.S.குணசேகரன், த/பெ.K.R.சீனிவாசன், A3 நிவாசன் அப்பார்ட்மெண்ட், PLS நகர், சின்னியம்பாளையம் போஸ்ட், கோயம்புத்தூர் என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புநர் K.S.குணசேகரன், த/பெ.K.R.*சீனிவாசன்*, A3 நிவாசன் அப்பார்ட்மெண்ட், PLS, நகர், சின்னியம்பாளையம் போஸ்ட், கோயம்புத்தூர், செல் நம்பர் 9442205389 பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர். நான் கோயம்புத்தூர் மாவட்டம் சின்னியம்பாளையம் போஸ்ட், PLS நகர், A3 நிவாசன் அப்பார்ட்மெண்டில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமாக திருப்பூர் மாவட்டம் காந்திநகர் போஸ்ட், 6 வது வீதி, கதவு எண். 34 பத்மாவதிபுரத்தில் வீடு உள்ளது. அந்த வீட்டில் எனது மனைவி லஷ்மி பிரபா பெயரில் Bescon & Co என்ற பெயரில் எர்த் மூவிங் எக்யூப்மெண்ட்ஸ் spare parts நிறுவன அலுவலகம் 2008-ம் ஆண்டு முதல் 2017- ம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தது. மேற்படி நிறுவனத்தை எனது மனைவி பெயரில் வணிக வரித்துறையில் பதிவு செய்து அதற்கு TIN 33852308806 -யை பெற்றுள்ளோம். மேற்படி நிறுவனத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு பொருட்களை விற்பனை செய்ய 14.5 சதவிகித வரி செலுத்த வேண்டும். அதற்கு நான் C Form முறையில் விற்பனை செய்து வருவதால், 2.0 சதவிகித வரி செலுத்தினால் போதும். இதற்கு பொருட்களை வாங்கிய நிறுவனத்தினிடமிருந்து C Form பெற்று வணிக வரித்துறை அலுவலகத்தில் சமர்ப்பித்தால் அதற்கு 12.5 சதவிகித வரி கட்ட வேண்டிய அவசியமில்லை. நான் எனது நிறுவனத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு பொருட்களை விற்பனை செய்த பின்னர் C Form முறையில் 2011 வருடம் முதல் 2017 வருடம் வரை 2.0 சதவிகித வரியை மாதந்தோறும் கட்டிவிட்டேன். ஆனால் அந்த பொருட்களை வாங்கிய கேரள நிறுவனத்திடமிருந்து C Form பெற்று தர காலதாமதம் ஆனதால் C Form யை வணிக

வரித்துறையில் சமர்ப்பிக்கவில்லை. மேற்படி நிறுவனம் 2017 – ம் ஆண்டில் ஜிஎஸ்டி வந்த பின்னர் செயல்பாட்டில் இல்லை. அதனால் நிறுவனத்தின் வங்கி கணக்கை நிறுத்தி விட்டோம். நானும், எனது மகன் சசிதரன் மற்றும் எனது மனைவி ஆகியோர் Bescon Borewell Compressor, Equipments Pvt Ltd என்ற கம்பெனியை நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, சீதாராம்பாளையம், ராமஜெயம் காம்பவுண்டில் நடத்தி வருகிறோம். அதில் நாங்கள் 3 பேரும் 2015- ம் வருடம் முதல் இயக்குநர்களாக இருக்கிறோம். மேற்படி கம்பெனிக்கு நாமக்கல் மாவட்டம், சங்ககிரி மெயின்ரோடு, திருச்செங்கோட்டில் உள்ள கனரா வங்கியில் கணக்கு உள்ளது. மேற்படி வங்கியிலிருந்து தலைமை மேலாளர் திருமதி. அகிலா அவர்கள் எனது மகனிடம் திருப்பூர் மாவட்டம், உதவி ஆணையர் (மாநில வரி) வடக்கு II வட்டம் அலுவலகத்திலிருந்து Bescon & Co நிறுவனத்தின் பெயரில் 2011 முதல் 2015- ம் வருடம் வரை கட்டவேண்டிய வரி நிலுவை தொகை ரூ.22,09,567/- கட்ட கடிதம் அனுப்பியுள்ளதாக 24.03.2022 தேதி சொல்லியுள்ளார். மேற்படி தகவலை எனது மகன் என்னிடம் சொன்னார். நான் எனது மகனிடம் வங்கிக்கு சென்று தலைமை மேலாளர் அவர்களை பார்க்குமாறு சொன்னதன் பேரில் அன்றைக்கே எனது மகன் மேலாளரை பார்த்து விட்டு விபரத்தை என்னிடம் சொன்னார். அதன்பின்னர் நான் 25.03.2022 தேதி காலை சுமார் 11.30 மணியளவில் திருப்பூர் வணிக வரி அலுவலகம், வடக்கு வட்டம் -II உதவி ஆணையர் திரு.ஜெயகணேசன் அவர்களை பார்த்து வங்கி மேலாளர் சொன்ன விபரத்தை தெரிவித்து C Form சமர்ப்பிக்காத லிஸ்டை தருமாறு கேட்டேன். உடனே அவர் அந்த அலுவலகத்தில் இருந்த கிளர்க் திருமதி. ரத்னா என்பவரை அழைத்து Bescon & Co நிறுவனத்தின் நிலுவையில் உள்ள C Form லிஸ்ட்டை எடுத்து கொடுக்க சொன்னார். உடனே திருமதி.ரத்னா நிலுவையில் உள்ள எனது நிறுவனத்தில் 2011 முதல் 2017 வரையுள்ள வருடங்களுக்கான C Form லிஸ்ட்டை எடுத்து வந்து என்னிடம் கொடுத்தார். அப்போது உதவி ஆணையர் அவர்கள் சீக்கிரமாக C Form யை கொடுத்து கணக்கை முடிக்க சொன்னார். நான் நிலுவையில் உள்ள C Form களை கேரளா சென்று பொருட்களை வாங்கிய நிறுவனத்திடமிருந்து பெற்று ஏப்ரல் மாதம் 3 வது வாரத்தில் உதவி ஆணையர் அவர்களிடம் கொடுத்தேன். அவர் அதனை பெற்று ரத்னாவிடம் கொடுத்து சரிபார்க்க சொன்னார். கிளர்க் ரத்னா அவர்கள் சரிபார்த்துவிட்டு நீங்கள் C Form கொடுத்த பின்பும் உங்களுக்கு 2011 முதல் 2017 வரையிலான காலத்திற்கு ரூ.6,78,572/- நிலுவை வரி

கட்ட வேண்டியுள்ளது என்றும், நான் கட்ட வேண்டிய வருடத்திற்கான நிலுவை வரி தொகை விபரங்களையும், எந்த பெயரில் டிடி எடுக்க வேண்டும் என்ற விபரத்தையும் எனக்கு வாட்ஸ் அப்பில் அனுப்புவதாகவும் சொன்னார். அப்போது உதவி ஆணையர் அவர்கள் நீங்கள் டிடியை கட்டிய பிறகு நான் பைனல் ஆர்டர் கொடுக்கிறேன். அதற்கு எனக்கு ரூ.10 லட்சம் லஞ்சமாக தர வேண்டும் என்று சொன்னார். நான் பார்க்கலாம் என்று சொன்னேன். அப்போது உதவி ஆணையர் மற்றும் ரத்னா ஆகியோர் எனது செல்போன் எண்ணை வாங்கி கொண்டு அவர்களது செல்போன் எண்களை கொடுத்தார்கள். 22.04.2022 தேதி காலை சுமார் 10.30 மணிக்கு எனது செல்போனுக்கு ரத்னா அவர்களது வாட்ஸ்ஆப்பிலிருந்து 2011 முதல் 2017 வருடம் வரை கட்டவேண்டிய வரி நிலுவை தொகை விபரங்களையும், The AC (ST), North II Circle, Tiruppur என்ற பெயரில் டிடி எடுக்க வேண்டிய விபரங்களையும் எனக்கு அனுப்பினார். அதன்படி நான் 2011 – 2012 ம் வருட CST ரூ.1,07,288/- க்கும், 2012 -2013- ம் வருட CST ரூ.48,782/- க்கும் 2013 -2014-ம் வருட CST ரூ.1,62,949/- க்கும், 2014 -2015- ம் வருட CST ரூ.76,708/- க்கும் மற்றும் 2016 -2017-ம் வருட CST ரூ.1,70,045/- க்கும் ஆக மொத்தம் ரூ.6,78,572/-க்கான தொகையை டிடியாக எடுத்து எனது மகன் சசிதரனிடம் கொடுத்து அனுப்பினேன். எனது மகன் 25.04.2022 தேதி காலை சுமார் 11.30 மணிக்கு உதவி ஆணையர் திரு.ஜெயகணேசன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து டிடியை கொடுத்துவிட்டு 2011 – 2017 வருடங்களுக்கான பைனல் ஆர்டர் கேட்டுள்ளார். அப்போது உதவி ஆணையர் அவர்கள் எனது மகனிடம் உனது அப்பாவிடம் ஏற்கனவே எனக்கு 10 லட்சம் கேட்டுள்ளேன். அந்த பணத்தை உனது அப்பாவை கொண்டு வரசொல் அப்போது நான் பைனல் ஆர்டர் தருகிறேன் என்று சொல்லியுள்ளார். அதற்கு எனது மகன் பிசினஸ் மிகவும் சுணக்கமாக உள்ளது என்றும் அதனால் அப்பாவால் பணம் தர முடியாது என்றும் கூறியுள்ளார். அதற்கு அவர் உனக்காக ரூ.3 லட்சம் குறைத்துகொள்கிறேன் என்று சொல்லி பைனலாக ரூ.7 லட்சம் கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். அதற்கு எனது மகன் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு வந்து என்னிடம் சொன்னார். அதன்பின்னர் நான் 02.05.2022 தேதி மதியம் சுமார் 2 மணியளவில் உதவி ஆணையர் அலுவலகம் சென்று உதவி ஆணையர் ஜெய்கணேசன் அவர்களை பார்த்தேன். அவர் என்னிடம் உங்களது மகனிடம் சொன்ன பணம் ரூ.7 லட்சத்தை கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் கொண்டு

வரவில்லை என்று சொன்னேன். உடனே அவர் நீங்கள் இன்னும் வரி கட்ட வேண்டி இருக்கும் என்று மிரட்டினார். நான் கேட்ட பணம் ரூ.7 லட்சத்தை கொடுத்தால் வரி வராமல் பைனல் ஆர்டர் தருகிறேன் என்றும் கிளர்க் ரத்னாவை போய் பாருங்கள் என்றும் சொன்னார். அதன்பின்னர் நான் கிளர்க் ரத்னாவை பார்த்தேன். அவர் உங்களுக்கு பைனல் ஆர்டர் ரெடியாக உள்ளது. உங்களது பைலை நான் கஷ்டப்பட்டு ரெடி பண்ணினேன்.எனக்கு தனியாக ரூ.2 லட்சம் கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான் பார்க்கலாம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். 04.05.2022 தேதி காலை சுமார் 11.30 மணியளவில் கிளர்க் ரத்னா அவர்கள் எனது செல்போனுக்கு அழைத்தார். நான் போனை எடுக்க வில்லை. அதன்பின்னர் நான் எனது மகனிடம் ரத்னா அழைத்த விபரத்தை சொல்லி அவரிடம் பேச சொன்னேன். எனது மகன் ரத்னா அவர்களிடம் மாலை சுமார் 4.30 மணிக்கு பேசியபோது அவர் நீங்கள் பணம் கொடுக்காததால் உதவி ஆணையர் போட்ட ஆர்டர்களை என்னிடமிருந்து வாங்கி சென்று விட்டார் என்றும், உங்கள் அப்பாவை உதவி ஆணையரிடம் பேச சொல்லுங்கள் என்று சொல்லியுள்ளார். இதனை என்னிடம் எனது மகன் சொன்னார். அதன்பின்னர் நான் இரவு சுமார் 9 மணிக்கு ரத்னா அவர்களிடம் செல்போனில் பேசியபோது ஏன் பணத்தை கொண்டு வராமல் லேட் செய்கிறீர்கள். உதவி ஆணையர் சத்தம் போடுகிறார். நீங்கள் அவரிடமே பேசி கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் 05.05.2022 தேதி காலை சுமார் 12.00 மணிக்கு உதவி ஆணையர் திரு.ஜெயகணேசன் அவர்களிடம் பேசியபோது தான் கேட்ட பணம் 7 லட்சத்தை ஏன் கொடுக்க மாட்டீர்கள் என்று கேட்டார். அதற்கு நான் பணம் ரெடி செய்ய மிகவும் சிரமமாக இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு அவர் எப்படியாவது ரூ.7 லட்சத்தை ரெடி செய்து விட்டு போன் செய்துவிட்டு வர சொன்னார். எனக்கு எனது மனைவி பெயரில் உள்ள நிறுவனத்திற்கு 2011 முதல் 2017 ஆண்டு வரையிலான காலத்திற்கு வரி நிலுவை தொகை இல்லை என்ற பைனல் ஆர்டர் வழங்க திருப்பூர் வணிக வரித்துறை வடக்கு வட்டம் - II உதவி ஆணையர் (மாநில வரி) திரு.ஜெயகணேசன் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.7 லட்சம் மற்றும் மேற்படி கோப்புகளை ரெடி செய்து வைக்க கிளர்க் திருமதி.ரத்னா லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2 லட்சம் ஆகியவற்றை கொடுக்க விருப்பமில்லை. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/-xxxx K.S.Gunasekaran, 06/05/2022. Sir, Received the complaint on 06.05.2022 at 09.00 hrs and conducted enquiry between 09.00 hrs to 09.30 hrs and registered a case in Tiruppur V&AC

Cr.No.06/2022/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act 2018 at 09.30 hrs. Sd/- xxxx (K.Sasilekha) 06.05.2022 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.K.S.Gunasekaran, S/o.K.R.Srinivasan, A3 Nivasan Apartment, PLS Nagar, Chinniyampalayam post, Coimbatore is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

06.05.2022
(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.